*SELECTION COMMITTEE (INDIAN MEDICINE),*
*DIRECTORATE OF INDIAN MEDICINE AND HOMOEOPATHY, CHENNAI -106.*
*TENTATIVE ONLINE COUNSELLING SCHEDULE FOR ROUND-2*
*U.G.- AUSH (B.A.M.S., B.U.M.S., B.S.M.S. & B.H.M.S.) MEDICAL DEGREE COURSES*
*ADMISSION TO GOVERNMENT QUOTA / SEATS SURRENDERED TO THE GOVERNMENT, ALL INDIA QUOTA AND MANAGEMENT QUOTA SEATS*
*FOR THE ACADEMIC SESSION - 2026-2027*

| ROUND | PROCESS | START DATE & TIME | END DATE & TIME |
|---|---|---|---|
| 2 | Registration for upgradation | 04.10.2026, 11:00 AM. | 06.10.2026, 05:00 P.M. |
| | Processing and display of Virtual Vacancies | 07.10.2026 | - |
| | Choice Filling & Choice Locking for Round - 2 | 08.10.2026, 11:00 AM. | 10.10.2026, 05:00 P.M. |
| | Processing of Seat Allotment | 11.10.2026 | - |
| | Result of Round -2 | 12.10.2026 | - |
| | Download of Provisional Allotment Order | 13.10.2026 | 16.10.2026 05:00 P.M. |
| | Reporting Date & Time | On or Before 16.10.2026 upto 05.00 P.M. | |

| INSTRUCTIONS | |
|---|---|
| Sl. No. | **Guidelines** for 2nd Round Online Counselling – UG- AUSH Medical Degree Courses |
| 1. | Do not share your login ID, password, or OTP with anyone. |
| | login ID, password, மற்றும் OTP ஆகியவற்றை யாரிடமும் பகிரவேண்டாம். |
| 2. | Candidates who have **not registered for Choice Filling in Round-1** for admission to the **AUSH-UG Medical Degree Courses** shall pay a **non-refundable Processing Fee** as detailed below:<br>• **Government Quota/ Seats surrendered to the Government : Rs.500/-** (Rupees Five Hundred only)<br>• **All India Quota (AIQ): Rs.1,000/-** (Rupees One Thousand only)<br>• **Management Quota (MQ): Rs.1,000/-** (Rupees One Thousand only)<br>The Processing Fee shall be paid **online through Debit Card / Credit Card / Net Banking**. |

| | |
|---|---|
| | *The **Choice Filling option will be enabled only upon successful payment of the applicable Processing Fee**.* |
| | *AUSH-UG பட்டப்படிப்புகளுக்கு விருப்பத்தேர்வுகளை (choice filling) முதல் கட்ட கலந்தாய்வில் பதிவு செய்யாத மாணவர்கள் திரும்பப் பெற முடியாத செயலாக்கக் கட்டணம் கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டும்:*<br>• ***அரசு ஒதுக்கீடு / அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்: ரூ.500/-*** *(ரூபாய் ஐநூறு மட்டும்)*<br>• ***அகில இந்திய ஒதுக்கீடு: ரூ.1,000/-*** *(ரூபாய் ஆயிரம் மட்டும்)*<br>• ***நிர்வாக ஒதுக்கீடு: ரூ.1,000/-*** *(ரூபாய் ஆயிரம் மட்டும்)*<br>*மேற்கண்ட செயலாக்கக் கட்டணத்தை (டெபிட் கார்ட் / கிரெடிட் கார்ட் / நெட் பேங்கிங்) ஆகியவற்றின் மூலம்* ***இணையவழியில் (Online)*** *செலுத்த வேண்டும்.*<br>***பொருந்தும் செயலாக்கக் கட்டணத்தை வெற்றிகரமாகச் செலுத்திய பின்னரே, விருப்பத் தேர்வு பதிவு செய்யும் (Choice Filling)*** *செயலாக்க வசதி திறக்கப்படும்.* |
| *3.* | *Candidates applying for more than one quota shall pay the **processing fee separately for each applicable quota**. Accordingly, a candidate applying for **GQ + AIQ + MQ** shall pay a total processing fee of **Rs.2,500/- (Rupees Two Thousand Five Hundred only)**, before choice filling.* |
| | *ஒன்றுக்கும் மேற்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், தங்களுக்கு பொருந்தக்கூடிய* ***ஒவ்வொரு ஒதுக்கீட்டிற்கும் தனித்தனியாக செயலாக்கக் கட்டணத்தை*** *செலுத்த வேண்டும். அதன்படி,* ***GQ + AIQ + MQ*** *ஆகிய மூன்று ஒதுக்கீடுகளின் கீழ் விருப்பத்தேர்வுகளைப் பதிவு செய்யும் விண்ணப்பதாரர், விருப்பப்பிரிவுகளைத் தேர்வு செய்வதற்கு (Choice Filling) முன்னதாக, மொத்தமாக* ***ரூ.2,500/- (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்)*** *செயலாக்கக் கட்டணமாக செலுத்த வேண்டும்.* |
| *4.* | *For Choice Filling, all the Candidates should pay a Advance Tuition Fee as follows:*<br>• ***Government Quota/ Seats surrendered to the Government : Rs.5,000/-*** *(Rupees Five Thounsand only)*<br>• ***All India Quota (AIQ): Rs.10,000/-*** *(Rupees Ten Thousand only)*<br>• ***Management Quota (MQ): Rs. 10,000/-*** *(Rupees Ten Thousand only)*<br>*through online. This fee is exempted for Candidates belonging to SC/SCA/ST/BC-Christians (converted from SC/SCA/ST) who are having valid Family Income Certificate less than 2.5 lakhs.*<br>***Note:*** *The candidates who have already paid Advance Tuition Fee when Choice filling in the first Round of online counselling need not pay again.* |
| | *விருப்பத் தேர்வுகளை நிரப்ப, விண்ணப்பதாரர்கள் ஆன்லைனில் கல்லூரி கட்டணம் முன்பணமாக கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டும்:*<br>• ***அரசு ஒதுக்கீடு / அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்: ரூ.5,000/-*** *(ரூபாய் ஐயாயிரம் மட்டும்)*<br>• ***அகில இந்திய ஒதுக்கீடு: ரூ.10,000/-*** *(ரூபாய் பத்தாயிரம் மட்டும்)*<br>• ***நிர்வாக ஒதுக்கீடு: ரூ. 10,000/-*** *(ரூபாய் பத்தாயிரம் மட்டும்)*<br>*மேற்கண்ட செயலாக்கக் கட்டணத்தை (டெபிட் கார்ட் / கிரெடிட் கார்ட் / நெட் பேங்கிங்) ஆகியவற்றின் மூலம்* ***இணையவழியில் (Online)*** *செலுத்த வேண்டும்.*<br>*குடும்ப ஆண்டு வருமானம் 2.5 லட்சத்திற்கு குறைவாக உள்ள செல்லுபடியாகும் குடும்ப* |

| | |
|---|---|
| | *வருமானச் சான்றிதழ் உள்ளவர்களுக்கு SC/SCA/ST/BC-Christians (SC/SCA/ST-விலிருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு) இந்தக் கட்டணம் விலக்கு அளிக்கப்படும்.*<br><br>***குறிப்பு:*** *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு கல்விக்கட்டண முன்பணம் செலுத்தியவர்கள் மீண்டும் செலுத்தத் தேவையில்லை.* |
| *5.* | *The candidates who have already registered for first Round of online counselling and paid online Registration fee need not pay again.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு செயலாக்கக் கட்டணம் செலுத்தியவர்கள் மீண்டும் செயலாக்கக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.* |
| *6.* | *Candidates who had registered for Round-1 and did not get any seat allotted are not required to register again. Also, candidates who have been allotted but not joined in Round-1 need not register again. But they have to fill their Choices (choice filling) again.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைக்காதவர்கள் மற்றும் முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைத்தும் கல்லூரியில் சேராதவர்கள் இக்கலந்தாய்விற்கு மீண்டும் பதிவுசெய்யத் தேவையில்லை. ஆனால், அவர்கள் அனைவரும் விருப்பத்தேர்வுகளை (choice filling) மீண்டும் பதிவுசெய்ய வேண்டும்.* |
| *7.* | *Candidate who have joined the allotted seats and wish to opt for upgradation need not pay Registration fee again but they have to login during the REGISTRATION WINDOW to confirm their participation in Round 2 so as to include their seats as Virtual Vacancies. If the candidates don't do this, they will not be eligible for upgradation.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடங்களை தேர்வு செய்து, அக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் வேறு கல்லூரிக்கு மாறுதல் செய்ய விரும்பினால் இக்கலந்தாய்விற்கு REGISTRATION WINDOWவில் பதிவு செய்து உறுதிசெய்துகொள்ள வேண்டும், இதற்கு மீண்டும் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. அப்போதுதான் மெய்நிகர் காலியிடம் (Virtual Vacancies) பட்டியலில் அவர்கள் பெயர் வரும். இல்லையென்றால் அவர்கள் இரண்டாம் கட்ட கலந்தாய்வில் பங்கேற்க முடியாது.* |
| *8.* | *The candidates who are willing for Re-allotment / Upgradation of Colleges have to register and fresh Choice filling and locking should be done. Their allotted seat (allotted in 1st round of online counselling) will be open for other Students for choice filling in 2nd round of counselling.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடங்களை தேர்வு செய்து, அக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் வேறு கல்லூரிக்கு மாறுதல் செய்ய விரும்பினால் இக்கலந்தாய்விற்கு பதிவு செய்து புதிய விருப்பக் கல்லூரியை தேர்வு செய்யலாம். முதலாம் சுற்று கலந்தாய்வில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம், 2-ஆம் சுற்று கலந்தாய்வில் மற்ற மாணவர்களின் விருப்பத் தேர்வி காகத் திறந்திருக்கும்.* |
| *9.* | *The candidates WHO ARE WILLING TO RETAIN THEIR SEAT, which was allotted in the 1st Round online counselling NEED NOT PARTICIPATE IN THIS ONLINE COUNSELLING.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு, இடம் கிடைத்த மாணவர்கள் அக்கல்லூரியிலேயே படிப்பை தொடர விரும்பினால் இக்கலந்தாய்வில் கலந்துகொள்ள* |

| | |
|---|---|
| | *வேண்டிய அவசியமில்லை.* |
| *10.* | *The candidates who have not participated/not allotted/allotted but not joined in Round -1 Online Counselling can participate in Round -2 Online Counselling. But, the candidates should have already applied for this Course in Tamil Nadu AYUSH Selection Committee and their names should be in the Merit Lists published.* |
| | *முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொள்ள தவறியவர்கள், முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைக்காதவர்கள் மற்றும் முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைத்தும் கல்லூரியில் சேராதவர்கள் இக்கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். ஆனால், அவர்களுடைய பெயர் தரவரிசைப்பட்டியலில் இடம் பெற்றிருக்கவேண்டும்.* |
| *11.* | *Candidates can edit their choices any number of times before locking, but once locked they will not be allowed to edit. Hence, Candidates are requested to check their choices and the order of preference before locking.* |
| | *விண்ணப்பதாரர்கள், விருப்பத் தேர்வுகளை (Choices) உறுதிசெய்வதற்கு (Locking) முன்பு எத்தனை முறை வேண்டுமானாலும் திருத்தம் செய்யலாம். ஆனால், விருப்பத் தேர்வுகள் ஒருமுறை உறுதிசெய்த (Locked) பின்னர், அவற்றில் எந்தவிதமான திருத்தமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.*<br>*எனவே, விருப்பத் தேர்வுகளைப் உறுதிசெய்வதற்கு முன், தாங்கள் பதிவு செய்துள்ள விருப்பத் தேர்வுகளையும், அவற்றின் முன்னுரிமை வரிசையையும் சரிபார்த்துக்கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.* |
| *12.* | *If the Candidate does not lock his/her Choices till the Last date their choices will be automatically locked.* |
| | *விண்ணப்பதாரர்கள், கடைசி தேதிக்குள் தமது விருப்பத் தேர்வுகளை (Choices) உறுதிசெய்யவில்லை (Lock) என்றால், கடைசி தேதிக்குப் பின்னர் அவரது விருப்பத் தேர்வுகள் தானாகவே உறுதிசெய்யப்படும்.* |
| *13.* | *Once a candidate lock the choices, further changes will not be allowed. Changing the branch/college after choice locking is not allowed for any reason.* |
| | *விண்ணப்பதாரர் ஒருமுறை விருப்பங்களை உறுதி செய்த பிறகு, மேலும் மாற்றங்கள் அனுமதிக்கப்படாது. விருப்பங்களை உறுதி செய்த பிறகு துறை/கல்லூரியை மாற்றுவதென்பது எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படாது.* |
| *14.* | *Candidates should be careful while selecting their choices.* |
| | *விண்ணப்பதாரர்கள் தங்கள் விருப்பங்களைத் தேர்ந்தெடுக்கும்போது கவனமாக இருக்க வேண்டும்.* |
| *15.* | *The Seat Matrix for AUSH-UG Medical Degree Courses will be displayed on the official websites.* |
| | *AUSH-UG பட்டப்படிப்புகளுக்கான இருக்கை அமைப்பு (Seat Matrix) அதிகாரப்பூர்வ இணையதளங்களில் வெளியிடப்படும்.* |
| *16.* | *The Selection Committee will not be responsible for internet or connectivity issues faced by the candidates.* |
| | *இணையம் அல்லது இணையஇணைப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தேர்வுக் குழு பொறுப்பாகாது.* |
| *17.* | *Admission will be carried out through online counselling only, strictly based on merit rank and Reservation Rules of Tamil Nadu Government.* |

| | |
|---|---|
| | கலந்தாய்வு மற்றும் சேர்க்கை இணையவழியில் மட்டுமே நடைபெறும், இது தரவரிசை மற்றும் தமிழ்நாடு அரசு, இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் மட்டுமே நடைபெறும். |
| *18.* | *The step-by-step procedure for online counselling will be published on the official website.* |
| | இணையவழி கலந்தாய்விற்கு கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும். |
| *19.* | *The Candidate selected for admission should submit a self-declaration form at the time of reporting to the concerned College. He / she is liable for forfeiture of selection / admission if suppression of facts / false informations found at any time during or after the admission to the course.* |
| | சேர்க்கைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட கல்லூரியில் சேரும் போது சுய-அறிக்கை படிவம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். சேர்க்கையின் போது அல்லது பின்னர் எந்தவொரு நேரத்திலும் உண்மைகளை மறைத்தல் / தவறான தகவல்கள் அளித்தல் ஆகியவை கண்டறியப்பட்டால், அவரது தேர்வு/சேர்க்கை ரத்து செய்யப்படும். |
| *20.* | *Allotted candidates in Government Colleges must download their provisional allotment order and report to the concerned Medical College/Institution within the given date and time.* |
| | அரசு கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்கள் தற்காலிக ஒதுக்கீட்டு உத்தரவை பதிவிறக்கம் செய்து, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி/நிறுவனத்தில் சேரவேண்டும். |
| *21.* | *Allotted candidates in Self Financing Colleges for Government Surrendered seats can download their provisional Allotment Order only after paying*<br>*Advance Tuition Fee as follows:*<br>• ***Seats surrendered to the Government: Rs.5,000/-*** *(Rupees Five Thounsand only)*<br>• ***All India Quota (AIQ): Rs.15,000/-*** *(Rupees Fifteen Thousand only)*<br>• ***Management Quota (MQ): Rs. 15,000/-*** *(Rupees Fifteen Thousand only)*<br>*as mentioned in Prospectus, after downloading they should report to the concerned Medical College/Institution within the given date and time. This fee is exempted for Candidates belonging to SC/SCA/ST/BC-Christians (converted from SC/SCA/ST) who are having a valid Family Income Certificate less than 2.5 lakhs.* |
| | சுயநிதி கல்லூரிகளில் உள்ள அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளுக்கு ஒதுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், தகவல் தொகுப்பேட்டில் குறிப்பிட்டுள்ளபடி கல்லூரி கட்டணம் முன்பணம் கீழ்க்கண்டவாறு செலுத்த வேண்டும்:<br>• **அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள்: ரூ.5,000/-** (ரூபாய் ஐயாயிரம் மட்டும்)<br>• **அகில இந்திய ஒதுக்கீடு: ரூ.15,000/-** (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)<br>• **நிர்வாக ஒதுக்கீடு: ரூ. 15,000/-** (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)<br>மேற்கண்ட செயலாக்கக் கட்டணத்தை (டெபிட் கார்ட் / கிரெடிட் கார்ட் / நெட் பேங்கிங்) ஆகியவற்றின் மூலம் **இணையவழியில் (Online)** செலுத்த வேண்டும்.<br>மேற்கண்ட கட்டணத்தை செலுத்திய பிறகு மட்டுமே தங்கள் தற்காலிக ஒதுக்கீட்டு உத்தரவை *(Allotment Order)* பதிவிறக்கம் செய்ய முடியும். பதிவிறக்கம் செய்த பிறகு, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி/நிறுவனத்தில் சேரவேண்டும். |

| | |
|---|---|
| | *குடும்ப ஆண்டு வருமானம் 2.5 லட்சத்திற்கு குறைவாக உள்ள செல்லுபடியாகும் குடும்ப வருமானச் சான்றிதழ் உள்ளவர்களுக்கு SC/SCA/ST/BC-Christians (SC/SCA/ST-விலிருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு) இந்தக் கட்டணம் விலக்கு அளிக்கப்படும்.* |
| 22. | *During reporting, Candidates must submit all the necessary original certificates along with xerox copies to the concerned Colleges. If a candidate fails to submit their Original Certificates and report to the Head of the Institution within the stipulated date and time, the allotment and admission will be automatically cancelled without prior notice.* |
| | *கல்லூரியில் சேரும் போது, விண்ணப்பதாரர்கள் தங்களின் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்களையும், அவற்றின் நகல்களையும் சம்பந்தப்பட்ட கல்லூரியில் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் கல்லூரி முதல்வரிடம் தகவல் தெரிவிக்கத் தவறினாலோ/சேரத்தவறினாலோ அல்லது அசல் சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறினாலோ, ஒதுக்கீடு மற்றும் சேர்க்கை முன்னறிவிப்பின்றி தானாகவே ரத்து செய்யப்படும்.* |
| 23. | *Note: In case of any doubt in the instructions, the English version of these instructions will be treated as final.* |
| | *குறிப்பு: மேலே உள்ள குறிப்புகளில் ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில பதிப்பு இறுதியானதாக கருதப்படும்.* |

***Secretary,***
***Selection Committee,***
***Directorate of Indian Medicine and Homoeopathy,***
***Arumbakkam, Chennai-600106.***